DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 390/2022
*****

Deposition of Witness for Prosecution witness No: PW1

LW1

| | |
|---|---|
| Name | : சந்தியா |
| Father`s Name | : தங்கம் |
| Village | : வெள்ளானைக்கோட்டை |
| Taluk | : சிவகிரி |
| Calling | : கூலி வேலை |
| Religion | : இந்து |
| Age | : 35 |
| Date | : 04.08.2026 |

**( Accused present. )**

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் சிவகிரி தாலுகா, வெள்ளானைக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் மில்லில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என்னுடைய கணவர். தற்போது அவருக்கும், எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. நானும், ஆஜர் எதிரியும் ஈரோட்டில் வேலை பார்க்கும் பொழுது, விருப்பப்பட்டு திருமணம் செய்து கொண்டோம். சேலம் மாவட்டம், எடப்பாடியில் குடும்பமாக வாழ்ந்து வந்தோம். எனக்கும், ஆஜர் எதிரிக்கும் சுஜி, ரூபி ஆகிய இரண்டு பெண் குழந்தைகள் உள்ளார்கள். அவருடன் ஒன்றாக வாழ்ந்த போது வேலைக்கு எதுவும் செல்லாமல்

குடித்துவிட்டு அடிக்கடி சண்டையிட்டு தொந்தரவு செய்வார். நாங்கள் ஒன்றாக வாழும் போது என் மேல் மண்ணெண்ணெய் ஊற்றி சாகடிச்சிடுவேன் என்று மிரட்டினார். மேலும் தலையணையை வைத்து முகத்தில் அமுக்கி தொந்தரவு செய்தார். பின்பு எனது கணவர் தொந்தரவினால் எனது வெள்ளானைக்கோட்டையில் உள்ள எனது தாயார் வீட்டிற்கு குழந்தையுடன் வந்துவிட்டேன். அதன்பின்பு ஒன்றரை வருடம் கழித்து ஆஜர் எதிரி என்னை பார்க்க வந்தார். 28.01.2015 ஆம் தேதியன்று காலை 6.00 மணிக்கு வெள்ளானைக்கோட்டையில் உள்ள எனது தாயார் வீட்டிற்கு வந்து எடப்பாடிக்கு வா என்று அழைத்தார். நான் வரமுடியாது என கூறினேன். கீழே கிடந்த சாலை எடுத்து எனது கழுத்தை வேகமாக இறுக்கினார். என்னால் எதுவும் பேச முடியவில்லை. இத்தோடு செத்து ஒழிந்து போ என்று சொன்னார். எனது தாயார் சுஜாதா அவர்கள் தடுக்க வரும் போது அவரையும் கொன்றுவிடுவதாக ஆஜர் எதிரி மிரட்டினார். என் தாயார் வெளியே சென்று சத்தம் போட்டு அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை அழைத்து வந்தார். பின்பு ஆஜர் எதிரி அங்கிருந்து போய்விட்டார். அருகே உள்ளவர்கள் என்னை புளியங்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்பு புளியங்குடி மருத்துவமனைக்கு வந்த புளியங்குடி காவல் நிலைய போலிசாரிடம் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னுடையது தான். அதில் காண்பிக்கப்படும் விவரங்கள் எனக்கு தெரியும். புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**